# விருதுநகர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.இரா.மதன்குமார்,எம்.ஏ., எம்.எட்.,

மூ.மு.எண்.11414/அ1/ 2024 நாள்: .12.2024 10.1.25

பொருள்: பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் - தென்காசி மாவட்டம் – மருதம்புத்தூர், அரசு மேல்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் திருமதி.சு.பேச்சியம்மாள் என்பாருக்கு இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை(நிலை) எண். 101, பள்ளிக்கல்வி வரவு செலவு திட்டம்-1) துறை, நாள்.18.05.2018.
2. அரசாணை(நிலை) எண். 151, பள்ளிக்கல்வி (SE1(1)1) துறை, நாள்.09.09.2022.
3.விருதுநகர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.08174/அ1/2023 நாள்.27.09.2023.
4. தென்காசி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.6750/அ1/2024 நாள்.02.12.2024.

((((0))))

ஆணை:

தென்காசி மாவட்டம், மருதம்புத்தூர், அரசு மேல்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் திருமதி.சு.பேச்சியம்மாள் என்பார் பார்வை (3)இல் காணும் செயல்முறையின்படி (தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம்) இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடக் கோரி பார்வை (4)இல் காணும் கடிதம் மூலம் கருத்துரு பெறப்பட்டுள்ளது.

பார்வை (1) மற்றும் (2)இல் கண்ட அரசாணை(நிலை) எண். 101, பள்ளிக்கல்வி வரவு செலவு திட்டம்-1) துறை, நாள்.18.05.2018 மற்றும் அரசாணை(நிலை) எண். 151, பள்ளிக்கல்வி (SE1(1)1) துறை, நாள்.09.09.2022ன்படி முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு நிர்வாக பகிர்மானம் செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து பணிநியமன அலுவலர் முதன்மை கல்வி அலுவலர் என்ற நிலையில், மருதம்புத்தூர், அரசு மேல்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் திருமதி.சு.பேச்சியம்மாள் என்பாருக்கு கீழ்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.



Scanned with OKEN Scanner

<u>நிபந்தனைகள்</u>

1. பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் முடித்த பின்னரே தகுதிகாண்பருவ ஆணை விளம்பப்படும்.
2. துறைத் தேர்வுகள் 2 ஆண்டுகள் காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.
3. தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூலினை 5 ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறாவிட்டால் தனியார் மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 இல் பிரிவு 31 மற்றும் 33ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் தகுதிகாண் பருவ ஆணை விளம்பப்பட்ட பின்னரே வழங்கப்படும்.

**இணைப்பு:** திருமதி.சு.பேச்சியம்மாள் என்பாரின் அசல் பணிப்பதிவேடு.

10/1/25

முதன்மைக் கல்வி அலுவலர்

விருதுநகர்.

**பெறுநர்:** சார்ந்த பணியாளர். (உரிய அலுவலர் மூலமாக)

~~படி:~~ தென்காசி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு அன்புடன் அனுப்பலாகிறது.

படி: தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, மருதம்புத்தூர்.



Scanned with OKEN Scanner